**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.264/2015** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.7 | |
| **Name:** | சுப்பையா | Caste |
| Father's Name | பொன்னையா | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 65 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 19-07-2022**
**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் சாத்தியடி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு அ.சா.1 ஐ தெரியும். எதிரியை எனக்கு தெரியாது. 16.08.2015 மாலை 4.30 மணியளவில் எனது நிலத்திலிருந்து வேலையை முடித்துவிட்டு வந்துகொண்டிருந்தபோது நாகுடி போலிசார் சம்பவ இடத்திற்கு விசாரணை செய்து வரைபடம் வரைந்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடன் சிதம்பரம் கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எத்தனை பக்கம் நான் கையொப்பம் செய்த பேப்பரில் எழுதியுள்ளது என்றால் 1 பக்கம். நான் வாங்கி படித்தேனா என்றால் இல்லை. போலிசார் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுகொடுத்தேன். காவல் நிலையம் நான் சென்றேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **CC.No.264/2015** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.8 | |
| **Name:** | சிதம்பரம் | Caste |
| Father's Name | சுப்பையா | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 47 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 19-07-2022**
**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் சாத்தியடி கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு அ.சா.1ஐ தெரியும். எதிரியை எனக்கு தெரியாது. 16.08.2015 மாலை 5 மணியளவில் சௌந்தர்ராஜன் விபத்தில் இறந்துவிட்டார் என கேள்விப்பட்டு நான் வந்தபோது நாகுடி போலிசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்து வரைபடம் வரைந்தனர். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் சுப்பையா கையொப்பம் செய்தார். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்தவர் எனக்கு என்ன உறவுமுறை என்றால் அண்ணன் உறவுமுறை. காவல் நிலையம் நான் சென்றேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை